

# புனித லூர்து மாதா தேவாலயம்


45, ஜாலான் சிலிபின், 30100 ஈப்போ, பேராக் மேற்கு மலேசியா

**பங்கின் குருவானவர்: அருள் தந். ரோபட் டேனியல்**

**மறைத்திரு திருத்தொண்டர் சந்தனசாமி பீட்டர்**

Tel: 05-5279349 Fax: 05-5276671

அகப்பக்கம்: lourdesipoh.org மின் அஞ்சல்:olol@ololipoh.org




**திருத்தந்தையின் கருத்து : புலம் பெயர்ந்த நமது சகோதர சகோதரிகள் மற்றும் ஆள்கடத்தலுக்கு உள்ளானோரின் அழுகுரல் கேட்கப்பட்டு, அக்கறை செலுத்தப்பட மன்றாடுவோம்.**

**பிப்ரவரி மாத கரு : அவர்தம் காயங்களால், நீங்கள் குணமடைந்துள்ளீர்கள்.**

## பங்கில் திருப்பலிகள்

| தேதி | நேரம் | திருப்பலிகள் | விளக்கம் |
|---|---|---|---|
| பிப் 9 ஞா | காலை 7.00<br>காலை 9.00 | திருப்பலி (த)<br>திருப்பலி (ஆ, ம) | பொதுக்கால 5ஆம் ஞாயிறு<br>பொதுக்கால 5ஆம் ஞாயிறு |
| பிப் 10 திங் | காலை 6.30 | திருப்பலி (ஆ) | புனித கொலஸ்திக்கா |
| பிப் 11 செவ் | மாலை 7.45 | நவநாள்/ திருப்பலி (ஆ, த) | புலூமா நாள் 9- நோயில் பூசுதல் |
| பிப் 12 புதன் | காலை 6.30 | திருப்பலி (ஆ) | பொதுக்கால வாரநாள் |
| பிப் 13 வியா | காலை 6.30 | திருப்பலி (த) | பொதுக்கால வாரநாள் |
| பிப் 14 வெள் | காலை 11.00<br>மாலை 5.00<br>மாலை 6.30 | திருமணம் (த)<br>திருமணம் (த)<br>திருப்பலி (த) | என்ட்ரூ டேவிட் & ஓட்ரி சூசைநாதன்<br>கேவின் ராஜ் சவுரியட் & எஞ்லின் சந்தாயு<br>புனிதர்கள் சிரில் & மெதோடியஸ் |
| பிப் 15 சனி | காலை 6.30 | திருப்பலி (ஆ) | பொதுக்கால வாரநாள் |
| பிப் 16 ஞா | காலை 7.00<br>காலை 9.00<br>காலை 11.00<br>மாலை 6.00 | திருப்பலி (த)<br>திருப்பலி (ஆ)<br>திருப்பலி (ம)<br>திருப்பலி (த) | பொதுக்கால 6ஆம் ஞாயிறு<br>பொதுக்கால 6ஆம் ஞாயிறு- புகுமுக தேர்வுக்கு அனுப்புதல்<br>பொதுக்கால 6ஆம் ஞாயிறு<br>அன்னை வேளாங்கண்ணி சிற்றாலயம், ஜெலாப்பாங் |

## பங்கு நடவடிக்கைகள்

| **பிப் 9 ~ 15** | **மாலை 7.30** | **புலூமாதே** | **அதிச வாரம்** |
|---|---|---|---|
| பிப் 10 திங் | மாலை 8.00<br>மாலை 8.00 | பெர். மை 1-1<br>ஆலயம் | சீடத்துவம் (த)<br>RCIA வேட்பாளர்கள் & ஆதரவாளர்கள் ஒத்திகை |
| பிப் 11 செவ் | காலை 8.30 | பெர். மை 1-3 | பங்கு பரிந்துரை செபம் |
| பிப் 13 வியா | மாலை 7.00<br>மாலை 7.45 | ஆலயம்<br>பெர். மை 2-2 | முன்னோன் வாசகர் பயிற்சி<br>RCIA (ஆ) |
| பிப் 14 வெள் | மாலை 7.30 | பெர். மை 1-3 | தமிழ் வகுப்பு |
| பிப் 15 சனி | மாலை 5.30 | ஆலயம் | செபமாலை/ சகாயமாதா நவநாள் |
| பிப் 16 ஞா | காலை 8.30<br>காலை 10.30<br>காலை 10.30<br>பிற்பகல் 4.00 | பெர். மையம்<br>பெர். மையம்<br>பங்கு மண்டபம்<br>பெர். மை 1-2 | மறைக்கல்வி (த)<br>மறைக்கல்வி (ஆ)<br>மறைக்கல்வி மாணவர்கள்- பெற்றோர்களுக்கான அமர்வு (படிவம் 3 & 4)<br>தனித்த தாய்மார்கள் குழு கூட்டம் |

## 2020 பிப்ரவரி மாத திருமணங்கள்

பிப் 22 மாலை 4.30 திருமணம் (த) கேவின் நிக்லஸ் த/பெ சூசைமாணிக்கம் & ரெபேக்கா த/பெ அற்புதசாமி

பிப் 29 மாலை 4.30 சடங்கு (ஆ) ஏரன் மாட் த/பெ சகாயநாதன் & சிசிலின் ஜேன் த/பெ M. லோரன்ஸ்

ஏற்பாடு செய்யப்பட்டுள்ள திருமணத்தில் யாருக்காவது ஆட்சேபம் இருந்தால் குருவானவரிடம்/ திருத்தொண்டரிடம் தெரிவியுங்கள்

## பங்கு செய்தி மற்றும் தகவல்கள்

**1. நன்றி:** பங்கு திருவிழா கொண்டாட்டத்தை செபமுள்ளதாகவும், அர்த்தமுள்ளதாகவும் உருவாக்கிய பல்வேறு பணிக்குழுக்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

**2. அடுத்த குழந்தைகள் திருமுழுக்கு (ஆங்கிலம்):** நாள்: 14 மார்ச் 2020 (சனி), நேரம்: மாலை 4.30. மேல் விபரங்களுக்கு பங்கு அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.

**3. மறைக்கல்வி மாணவர்களின் வேடிக்கை விளையாட்டுகள்:** பங்கின் மறைக்கல்வி பணிக்குழுவுடன் லூர்து விளையாட்டு குழுவும் ஒருங்கிணைந்து ஆரம்பப்பள்ளி 1 & 2 மறைக்கல்வி மாணவர்களுக்கு 16 பிப் 2020 (ஞாயிறு) காலை 10.30க்கு பங்கு வளாகத்தில் வேடிக்கை விளையாட்டுகளை ஏற்பாடு செய்திருக்கிறது. அனைத்து பெற்றோர்களும், பங்கு மக்களும் இந்த நிகழ்வினை பார்க்க அழைக்கப்படுகிறீர்கள்.

**4. லூர்து அனுபவம் (லூர்து குளியல்) 2020:** லூர்து அனுபவம் 2020 1ஆவது மற்றும் 3ஆவது சனிக்கிழமைகளில் (காலை) மற்றும் 5ஆவது சனிக்கிழமையில் (மாலை) நடைபெறும். பதிவுகள் காலை 9.30 ~ 10.00 மற்றும் லூர்து அனுபவ பயணம் காலை 10.00க்கு தொடங்கும். பதிவு செய்தவர்கள் மட்டுமே இந்த லூர்து அனுபவ பயணத்தில் கலந்துக்கொள்ள முடியும். அடுத்த லூர்து அனுபவம் 15 பிப் 2020 (சனி - காலை).

**5. நோவல் கொரோனா நச்சுயிரி பற்றிய உடனடி முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து பங்கின் ஆலோசனைகள் (ஊஃகான் நச்சுயிரி):** அ) காய்ச்சல் அல்லது உடல் நலமற்றிருக்கும் நபர்கள் (குழந்தைகள் உள்பட) திருப்பலிக்கு வருவதிலிருந்து விலக்களிக்கப்படுகின்றனர். அவர்கள் வீட்டிலேயே இருக்கவும், மற்ற பொது இடங்களைத் தவிர்க்கவும் ஆலோசனை வழங்கப்படுகிறது. ஆ) இந்த கால கட்டத்தில் நற்கருணையை உங்கள் கைகளால் பெறுங்கள். இ) அமைதியை/ சமாதானத்தை அறிவித்துக்கொள்ளும்போது கைகளைக் குலுக்குவதை/ உடலை தொடுவதை தவிர்த்துக்கொள்ளுங்கள். ஈ) ஆலய நுழைவாயில்களிலுள்ள கிண்ணங்களில் புனித நீர் இருக்காது. உ) மெல்லிழைத்தாள்களை (Tissue) இருக்கைகளில் விட்டுச்செல்லாதீர்கள், அவற்றை தயார் செய்யப்பட்டிருக்கும் குப்பைத் தொட்டிகளில் போடுங்கள். ஊ) தேவைப்பட்டால் தயவு செய்து முகக் கவசங்களை அணியுங்கள்.

**6. ஒரு குருத்துவ மாணவர்:** திரு. மெல்வின் டோசன் குருத்துவத்திற்கு நுழைய ஆயர் செபஸ்தியன் அவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டார் என்பதை நான் மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறேன். அவர் ஆயத்தநிலை ஆண்டு உருவாக்கத்தை தொடங்குவார். அவர் 17 பிப் 2020 பினாங்கு குருத்துவ கல்லூரிக்கு செல்லவார். நமது செபத்தில் அவரை நினைவு கூறுவோம். நாம் தொடர்ந்து மற்ற குருத்துவ மாணவர்களுக்காகவும் மன்றாடுவோம்.

**7. நோயில் பூசுதல்:** 11 பிப் 2020ல் உலக நோயாளர் தினத்தை நாம் கொண்டாடுவோம் (புனித லூர்து அன்னை திருவிழா) இதையொட்டி நோயில் பூசுதல் நடைபெறும். தயவு செய்து உங்களது பெயர்களை புனித பெரிகிரின் குழுவிடம் பதிவு செய்துக் கொள்ளுங்கள். ஞாயிற்று கிழமை (9 பிப் 2020) திருப்பலிகளுக்கு பிறகு பங்கு மண்டபத்தில் பதிவுகள் நடைபெறும்.

**8. காலை சிற்றுண்டி:** குடும்ப வாழ்வு பணிக்குழு 16 பிப் 2020 ஞாயிறு காலை 7.00 & 9.00 மணி திருப்பலிகளுக்கு பிறகு காலை சிற்றுண்டியை விற்பனை செய்யவுள்ளனர்.

**9. லூர்து புகைப்பட& கணினி வரைகலை சங்கம் (லூபுகவ):** புதிய அமர்வு 15 பிப் 2020 (சனி) பிற்பகல் 3.00க்கு பெர்.மை 3-6ல் நடைபெறும். பங்கு அலுவலகத்தில் பதிவு பாரங்களை பெற்றுக்கொள்ளலாம். இறுதி நாள்: 9/2/2020 (ஞாயிறு).

**10. அனைத்துலக மகளிர் தின கொண்டாட்டம்:** 8 மார்ச் 2020 (ஞாயிறு) புலூமா தேவாலயத்தில் நடைபெறும். 26 ஜன ~ 23 பிப் 2020 ஞாயிறு திருப்பலிகளுக்கு பிறகு பங்கு மண்டபத்தில் பதிவுகள் நடைபெறும்.

**11. திருநீற்று புதனுக்கு 2019இல் ஆசீர்வதிக்கப்பட்ட குருத்தோலைகள்:** விபூதி புதனுக்கு பயன்படுத்தப்படும் விபூதி முந்தைய ஆண்டு ஆசீர்வதிக்கப்பட்ட ஓலைகளிலிருந்து வருகிறது. இவ்வாண்டு விபூதி புதன் **26/2/2020ல்** வருகிறது. பழைய ஓலைகளை 23 பிப் 2020 (ஞாயிறு) நண்பகலுக்கு முன்பாக தூயக பணியாளர் மெத்தியூஸ் அல்லது பங்கு அலுவலகத்தில் ஒப்படைக்கவும்.

**புலூமா ஏழைகளுக்கான உணவு (2009ல் நிறுவப்பட்டது):** உணவு திட்டம்: புதன்/ வியா மதியம் 12.45 ~ 1.45 வரை First Garden மெதுவோட்ட பாதை (Jogging Track) பெகோர் அடுக்குமாடி வீடு அருகில் செயல்படுகிறது.

**நம்பிக்கை மையம்:** நம்பிக்கை மையம் ஞாயிறு காலை 10.30 ~ மதியம் 12.00 மற்றும் செவ்வாய் & வியா காலை 10.30 ~ மதியம் 12.00/ மாலை 5.30 ~ மாலை 7.00 வரை திறந்திருக்கும்.

**நிதி பொறுப்புடைமை:** பங்கு குருவானவரிடமிருந்து எழுத்துபூர்வமான அனுமதி இல்லாமல் ஏதேனும் நிதி உதவி பெற யாருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை. தயவுசெய்து என் பெயரை பயன்படுத்தி யாரேனும் பணம் கேட்டால் அவர்களை பொறுட்படுத்தாதீர்கள். இம்மாதிரியான எந்த வித நிதி மோசடிக்கும் நான் பொறுப்பேற்க மாட்டேன். இம்மாதிரியான பிரச்சனைகள் இருந்தால் உடனடியாக என்னையோ அல்லது பங்கு அலுவலகத்தையோ தொடர்பு கொண்டு உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள். அனைத்து நன்கொடைகளும் பங்கு அதிகாரப்பூர்வமான ரசீதுகளால் ஏற்றுக்கொள்ளப்படும்.

**சிற்றாலயம் மற்றும் பங்கு நிதி ஜனவரி 2020 வரை:** கிறிஸ்து அரசர் சிற்றாலயம் - ரிம 485,611.28
அன்னை வேளாங்கண்ணி சிற்றாலயம் - ரிம 559,977.72 ஆலய பழுதுபார்ப்பு & சீரமைப்பு - ரிம 488,732.05
(மாதத்திற்கு ஒருமுறை அன்றைய விபரம் வெளியிடப்படும்)

**02/02/20 திருப்பலி வசூல்கள்: காலை 7.00** - RM 1,328.10 **காலை 9.00** - RM 1,549.50 **மொத்தம்**- RM 2,977.60
**2019** - RM 22.00 **2020** - RM 725.00 **ஆலய பழுதுபார்ப்பு & சீரமைப்பு**- RM 1,028.20
நன்கொடைகளை பங்கு அலுவலகத்தில் ஒப்புக்கொடுக்கலாம். காசோலைகளில் புனித லூர்து மாதா தேவாலயம் என்று ஆங்கிலத்தில் எழுதவும்